Toronto Seniors Housing Corporation

## உள்ளடக்கம்

தலைமை நிறைவேற்று அதிகாரியிடமிருந்து (CEO) செய்தி ..... 2
நல்லதுக்கான போராடல் ..... 4
Community Connect+ இற்றைப்படுத்தல் ..... 8
உங்கள் கலைப்படைப்பை 'Community in Colour (வண்ணமயமான சமூகம்)' நாள்காட்டிக்குச் சமர்ப்பியுங்கள். ..... 11
மீண்டும் தொடங்குவதற்கான மனத் தைரியம் ..... 13
உங்கள் சமூகம் பற்றிய ஒரு பார்வை ..... 17
உள்ளார்ந்த அர்த்தத்தை விளங்கிக்கொள்ளல் ..... 19
கோப்பிக்கான சந்திப்பைத் தொடங்குவது எப்படி ..... 22
TSHC கட்டிடங்களுக்கு fitness (உடற்பயிற்சி)ஐ, Parks and Recreation கொண்டுவருகிறது. ..... 24
செல்லப்பிராணிகளுடன் சந்தோஷமாக வாழல் ..... 25
முக்கியத்துவம் வாய்ந்த நாள்களைக் கொண்டாடல் ..... 27
அழைப்பிலிருந்து வழக்கு வரை: CSU விசாரணைகள் எவ்வாறு செயல்படுகின்றன ..... 29
கூட்டுநிறுவனம் தொடர்பான இற்றைப்படுத்தல்கள் ..... 33

**Seniors Speak இதழின் வரவிருக்கும் பதிப்பில் எதையாவது நீங்கள் பகிர்ந்துகொள்ளப் போகிறீர்களா?** சமூகத்துடன் பகிர்ந்துகொள்வதற்கு, எப்போதும் நாங்கள் புதிய கருத்துகளைத் தேடிக்கொண்டிருக்கிறோம். பகிர்வதற்கு ஒரு சமையல் குறிப்போ, ஒரு கவிதையோ, அல்லது ஒரு சிறியதொரு பிரதிபலிப்போ உங்களிடம் எது இருந்தாலும், SeniorsSpeak@TorontoSeniorsHousing.caஇல் எங்களைத் தொடர்பு கொள்வதற்குத் தயங்காதீர்கள்.

## தலைமை நிறைவேற்று அதிகாரியிடமிருந்து (CEO) செய்தி

அன்புள்ள வாடகைதாரர்களுக்கு,

வசந்த காலம் வந்துவிட்டது, கூடவே 'Seniors Speak'இன் புதிய பதிப்பும் வந்துவிட்டது! இந்த இதமான வானிலையையும், பிரகாசமான நாள்களையும் நீங்கள் ரசித்து மகிழ்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். பகல் பொழுதுகள் நீள்வதைக் காண்பதுவும், வெளியில் இன்னும் சிறிது நேரம் செலவிடுவதும் எப்போதுமே அருமையானதொரு உணர்வாக இருக்கிறது.

Toronto Seniors Housing தொடங்கப்பட்டு, ஜூன் 2026-உடன் **நான்கு ஆண்டுகள்** நிறைவடைகின்றன. இது எங்கள் அனைவருக்கும் ஒரு பெரிய மைல்கல் ஆகும். வரவேற்கப்படும், வெற்றியடையக்கூடிய உணர்வை

ஒவ்வொருவரும் உணரும் ஒரு சமூகத்தை நாங்கள் தொடர்ந்து கட்டமைக்கும் இந்த வேளையில், உங்கள் ஆதரவு, கருத்துகள் மற்றும் ஒத்துழைப்பிற்கு நான் நன்றி கூற விரும்புகிறேன். உண்மையான முன்னேற்றத்தை நாங்கள் இணைந்து உருவாக்கியிருக்கிறோம், இருப்பினும் இன்னும் செய்ய வேண்டிய பணிகள் இருக்கின்றன என்பதையும் நாங்கள் அறிவோம். உங்களுடன் இணைந்து இந்தப் பணியை நாங்கள் தொடர முடிகிறது என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஜூன் மாதமும் முக்கியமான கொண்டாட்டங்கள் நிறைந்ததாக உள்ளது. ஒன்ராறியோவில் இது **முதியோருக்கான மாதமாகும்**, எங்களின் சமூகங்களை முதியோர் பல வழிகளில் வலுப்படுத்தும் விதத்தை அங்கீகரிக்கும் தருணம் இது. உங்கள் அனுபவமும் ஆழ்ந்த அறிவும் ஒவ்வொரு நாளும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது, அத்துடன் அதைக் கௌரவிப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். ஜூன் மாதம் **Pride Month** ஆகவும், **National Indigenous History Month (தேசிய பழங்குடியினர் வரலாற்று மாதம்)** ஆகவும் கொண்டாடப்படுகிறது. இந்த இரண்டுமே எங்களின் சமூகத்தை மேலும் வலிமையாக்கும் பன்முகத்தன்மையைப் பற்றிக் கற்றுக்கொள்வதற்கும், பிரதிபலிப்பதற்கும், கொண்டாடுவதற்குமான அர்த்தமுள்ள தருணங்களாகும்.

மகிழ்ச்சியான தருணங்களும் நல்ல நட்பும் நிறைந்த, இதமான மற்றும் மகிழ்ச்சியான வசந்த காலம் உங்களுக்கு அமைவதற்கு நான் வாழ்த்துகிறேன்.

Tom Hunter

தலைமை நிர்வாக அதிகாரி

## நல்லதுக்கான போராடல்

தன் சொந்த வாழ்வில் சரியானவற்றுக்காகப் போராடக் கற்றுக்கொண்ட Debbie O'Brien, நீண்ட காலத்திற்கு முன் பிறருக்காகப் பரிந்துபேசுபவராக மாறியிருக்கிறார்.

1950 மற்றும் 60களில் ரொறன்ரோவின் மையப்பகுதியில் ஒரு சிறுமியாக இருந்த Debbieக்கு விரைவாக வளர வேண்டிய கட்டாயம் இருந்தது. அவருடைய தாய் அடிக்கடி வீட்டை விட்டுச் சென்றார், அவருடைய தந்தை போர்க்கால மனஅதிர்ச்சி மற்றும் குடிப்பழக்கத்தால் அவதிப்பட்டார், அவரின் தங்கையைக் கவனித்துக்கொள்வதற்காகப் 16 வயதிலேயே பாடசாலைக்குச் செல்வதை அவர் நிறுத்தியிருந்தார். பதின்மவயதில், தான் ஒரு ஓரினச்சேர்க்கைப் பெண் என்று அவர் வெளிப்படுத்தியபோது, அவரின் சகோதரியை அவர்

"பாதித்துவிடுவார்" என்ற அச்சத்தின் காரணமாக வீட்டிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டிருந்தார். “Give me a break (இனிப் போதும்)” எனத் தலையை ஆட்டியபடி அவர் இப்போது சொல்கிறார்.



ஏனையோரின் வீடுகளில் மாறி மாறித் தங்கியிருந்தபோது, தனக்குப் பிடித்த ஒரு வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொள்வது என்பதைக் கற்றுக்கொண்டபடி, தொழிற்சாலைகளிலும் உணவகங்களிலும் Debbie வேலை செய்யத் தொடங்கினார். ஒரு மதுபானக் கடைக்கு வெளியே இரண்டு பெண்கள் கைகோர்த்துச் சென்றாலே, காவல் வாகனத்தில் அவர்கள் ஏற்றப்படக்கூடிய ஒரு காலகட்டத்தில்,

ரொறன்ரோவின் queer community உடன் அவர் சேர்ந்துகொண்டார்.

“அன்றைய காலத்தில் நிகழ்ந்த யாவும் நான் மேலும் வலிமையாக இருப்பதற்குக் கற்றுக்கொடுத்தன,” என்கிறார் Debbie. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவும், பேரணி செல்லவும், எதிர்த்துப் போராடவும் நான் கற்றுக்கொண்டேன். நான் யாராக இருக்க முடியும், யாராக இருக்க முடியாது என்பதை நீங்கள் எனக்குச் சொல்ல முடியாது."

George Brown’s Assaulted Women’s and Children’s Counsellor (தாக்குதலுக்கு உள்ளான பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கான கவுன்சிலர்/ஆதரவு வழங்குபவர்)/diploma program இல்சேர்ந்தபோது, சிறுவர் மற்றும் இளையோர் நலப் பணியாளராக அவரது வாழ்க்கை மாறியது. Children’s Aid Society மற்றும் Covenant House ஆகியவற்றில் பதவி வகித்தபோது, அனைத்துத் தரப்பு இளையோருக்கும் Debbie ஆதரவளித்தார். அவர், queer இளையோருக்கான ரொறன்ரோவின் ஆரம்பகாலக் குழு இல்லங்களில் ஒன்றில்கூட பணிபுரிந்தார்.

"ஓரினச்சேர்க்கையாளர்களாக இருப்பதால் அல்லது மனநலப் பிரச்சினைகளைக் கொண்டிருப்பதால் ஏராளமான பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியேறும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர்," எனக்

குழு இல்லத்தில் இருந்த தனது அனுபவத்தைப் பற்றி அவர் கூறுகிறார். முதல் முறையாக, இந்தப் பிள்ளைகள் தாங்கள் யார் என்பதை ஆராய்ந்து, பாதுகாப்பாக உணர முடிந்தது.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் இத்துறையில் பணியாற்றிய பிறகு, Debbie ஓய்வுபெற்றார். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக, Toronto Seniors Housing இல் குடியிருப்பாளராக இருக்கும் Debbie, Senior Tenants Advisory Committee (STAC) இல், தனது சமூகத்தின் தேவைகளுக்காகப் பரிந்து பேசுகிறார். உணவின் ஸ்திரத்தன்மை குறித்து குறிப்பாக அவர் மிகுந்த கரிசனை கொண்டிருக்கிறார்.

"முதியோர் முக்கியமற்றவர்கள் என்று நினைப்பதை மக்கள் நிறுத்த வேண்டும்." “இந்த நாட்டை நாங்கள்தான் உருவாக்கினோம்,” என்று அவர் கூறுகிறார். "அநீதிக்கு எதிராகப் போராடுவது எப்போதுமே என் இயல்பாக இருந்து வருகிறது."

அதில் அவர் மகிழ்ச்சியடைகிறார். "தேவை உள்ளவருக்காகப் போராடுவது எப்போதுமே மகிழ்ச்சி தரும் ஒரு செயலாகும்." என்ன தடை வந்தாலும், துணிந்து முன்நின்று போராடும் மனிதர்கள் இந்த உலகில் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் நிரூபித்து வருகிறீர்கள்."

## Community Connect+ இற்றைப்படுத்தல்

நகர் முழுவதும் உள்ள Tenant Circles (குடியிருப்போர் குழுக்கள்), தங்களது கட்டடங்களில் சில அற்புதமான நிகழ்வுகளை நடத்துவதற்காகக் கடுமையாக உழைத்து வருகின்றன. சமீபத்திய சில உதாரணங்கள் இதோ:

- **540 Queen Street East** சுவையான pizza மதிய உணவு நிகழ்வை நடத்தியது.
- **3330 Danforth Avenue** சிறப்பான Valentine's Day மதிய விருந்துக் கொண்டாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.
- பல கட்டடங்கள் பெப்ரவரி மாதத்தில் **Lunar New Year** விழாக்களைக் கொண்டாடின.

Lunar New Year பற்றிப் பேசுகையில், பெப்ரவரி மாதத்தில் **Mayor Olivia Chow மீளவும்** பல கட்டடங்களில், TSHC குடியிருப்பாளர்களுடன் அந்தப் பண்டிகையை நேரில் கொண்டாடியிருக்கிறார். கொண்டாட்டங்களில் கலந்துகொண்ட அனைத்து வாடகைதாரர்களுக்கும் நன்றி!



## Senior Tenants Advisory Committee (முதிய வாடகைதாரர்கள் ஆலோசனைக் குழு/STAC) இன் இற்றைப்படுத்தல்

பெப்ரவரி மாதத்தில் உருவாக்கத்தில் உள்ள சில முக்கிய TSHC செயல்திட்டங்கள் குறித்த விளக்கங்களைக் கேட்பதற்கும், கருத்துக்களை வழங்குவதற்கும் STAC கூடியது. ஒரு திட்டம் என்பது வாடகைதாரர்கள் தன்னார்வலப் பயிற்சித் திட்டமாகும் ( கீழே உள்ள பகுதியில் இந்தத் திட்டம் பற்றி மேலும் அறியுங்கள்). எந்த வகையான பொது மற்றும் சிறப்புத் திறன்களைக் கற்றுக்கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை STAC உறுப்பினர்கள் பகிர்ந்துகொண்டதோடு, அதிக தன்னார்வலர்களை ஈர்ப்பதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர். இக்கூட்டத்தில் TSHC-யின் வரவிருக்கும் வியூக வழிகாட்டுதல்கள் குறித்த இற்றைப்படுத்தல் பற்றியும் கலந்துரையாடப்பட்டது; இதைப் பற்றி இந்த இதழின் Corporate Updates (பெருநிறுவன இற்றைப்படுத்தல்கள்) பிரிவில் நீங்கள் வாசிக்கலாம்.

## வாடகைதாரர் தன்னார்வப் பயிற்சித் திட்டம்

TSHC வாடகைதாரத் தன்னார்வலர்களின் தன்னார்வத் தொண்டு அனுபவங்கள் குறித்த கருத்துக்களைப் பெறுவதற்காக, பணியாளர்கள் ஒரு கலந்தாலோசனைக் கூட்டத்தைக் கடந்த ஆண்டு

நடத்தினர். தலைமைத்துவத் திறன்களை வளர்த்துக்கொள்வதில் வாடகைதாரர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பது நாங்கள் கேட்ட பொதுவான கருத்துக்களில் ஒன்றாகும்.

அந்தக் கருத்துக்களைக் கருத்தில்கொண்டு, **வாடகைதாரர்கள் தன்னார்வலர் பயிற்சித் திட்டம்** ஒன்றை Community Programs and Partnerships Team (சமூகத் திட்டங்கள் மற்றும் கூட்டாண்மைக் குழு) உருவாக்கியுள்ளது. மார்ச் மாதத்தில், 94 வாடகைதாரத் தன்னார்வலர்கள் வெளி ஆலோசகர் ஒருவரால் நடத்தப்பட்ட சிறப்புத் **திறன் பயிற்சி** திட்டத்தில் பங்கேற்றனர். தன்னார்வலர்களுக்கு அவர்களின் பணிகளில் உதவுவதற்காக, ஒரு புதிய குடியிருப்பாளர் தன்னார்வலர் **கையேட்டையும்** குழு அறிமுகப்படுத்துகிறது.








## உங்கள் கலைப்படைப்பை 'Community in Colour (வண்ணமயமான சமூகம்)' நாள்காட்டிக்குச் சமர்ப்பியுங்கள்.

கடந்த ஆண்டு, வாடகைதாரர்களின் கலைப்படைப்புகளைக் கொண்ட சுவர் நாள்காட்டியான '**Community in Colour** ' என்ற செயல்திட்டத்தை TSHC தொடங்கியது. நகர் முழுவதிலும் உள்ள வாடகைதாரர்கள் **170-க்கும் மேற்பட்ட அற்புதமான கலைப் படைப்புகள்** பரிசீலனைக்காகச் சமர்ப்பித்திருந்தனர். 2025இல் இத்திட்டம் பெரும் வெற்றி பெற்றதால், நாங்கள் அதை 2026இலும் மீளவும் செயல்படுத்துகிறோம்!

**2027 ஆம் ஆண்டு நாள்காட்டியில் இடம்பெறும் வாய்ப்பைப் பெறுவதற்காக, உங்கள் கலைப்படைப்பின் நிழல்படம் ஒன்றைச் சமர்ப்பியுங்கள்!** வரைபடங்கள், ஓவியங்கள், ஊசிவேலைப்பாடுகள், மட்பாண்டங்கள் (drawings, paintings, needlepoint, pottery) போன்றவற்றை உள்ளடக்கிய காட்சிக்கலைப் படைப்புகளையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

### எப்படிச் சமர்ப்பிப்பது:

- உங்கள் கலைப் படைப்பினைப் படம் எடுங்கள். 5 கலை வேலைப்பாடுகள் வரை நீங்கள் சமர்ப்பிக்கலாம். நாள்காட்டி வடிவமைப்புக்குக்

கிடைமட்டமாக எடுத்த படங்களே சிறப்பாக இருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

- உங்கள் பெயர், கட்டடம், தொலைபேசி இலக்கம் மற்றும் நீங்கள் சமர்ப்பிக்கும் கலை வகை ஆகியவற்றை உள்ளடக்குங்கள்.
- உங்களது சமர்ப்பிப்புகளை **Communities@TorontoSeniorsHousing.ca**என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.

இந்த ஆண்டு புதிய கலைஞர்களை முன்னிலைப்படுத்துவதில் நாங்கள் உற்சாகமாக உள்ளோம், எனவே கடந்த ஆண்டு  நாள்காட்டியில் அவர்களின் கலைப்படைப்புகள் இடம்பெறும் சந்தர்ப்பம் கிடைக்காத வாடகைகைதாரர்களுக்கு முன்னுரிமை அளிப்போம்.

சமர்ப்பிப்பதற்கான கடைசித் திகதி **மே 29, 2026, வெள்ளிக்கிழமை** ஆகும்.

உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் அல்லது உதவி தேவைப்பட்டால், **Communities@TorontoSeniorsHousing.ca**ஐ அல்லது **416-945-0800** என்ற இலக்கத்தில் **Tenant Support Centre (வாடகைதாரர் ஆதரவு மையம்)** ஐத் தொடர்பு கொள்ளுங்கள்.



## மீண்டும் தொடங்குவதற்கான மனத் தைரியம்

இன்று Naima Siddiqui, மக்களை ஒருங்கிணைக்கும் பெண்ணாக அறியப்படுகிறார். ஆனால், TSHC இல் சமூகத் தன்னார்வப் பணியில் ஈடுபடுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, Naima எடுத்த தொடர்ச்சியான துணிச்சலான முடிவுகள், மகிழ்ச்சியற்ற வாழ்க்கையிலிருந்து சுதந்திரமும் சௌகரியமும் நிறைந்த வாழ்க்கைக்கு அவரை அழைத்துச் சென்றன.

இந்தியா, பாகிஸ்தான் பிரிவின்போது, பிறந்த Naima, தனது பிள்ளைப்பராயத்தைப் பாகிஸ்தானுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே கழித்தார். பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள Pakistan International Airlines இல் பணிப்பெண்ணாகப் பணியாற்றி, உலகம் முழுவதிலுமிருந்து வரும் பயணிகளுக்கு உதவி செய்துகொண்டிருந்த அவர், துடிப்பான ஓர் இளம் பெண்ணாக வளர்ந்தார். “எனக்கு அந்த வேலை மிகவும்

பிடித்திருந்தது,” என்று Naima கூறுகிறார். "விமான நிலையத்தில் பணியாற்றிய காலம் என் வாழ்வின் மிகவும் மகிழ்ச்சியான தருணமாக இருந்தது."

திருமணம் எல்லாவற்றையும் மாற்றியது. பழமைவாதமும் கட்டுப்பாடும் மிக்க குடும்பத்திற்குள் சென்றதால், தனது சுதந்திரம் பறிபோவதாக Naima உணர்ந்தார். "திருமணத்திற்கு முன்பு நான் யாராக இருந்தேன் என்பதை நான் முற்றிலும் மறக்க வேண்டியிருந்தது," என்பதை அவர் நினைவு கூர்கிறார். அவருடைய இரண்டு பிள்ளைகள் அவருக்குப் பலமாக அமைந்தனர்.



வேதனை நிறைந்த 25 வருட காலத் திருமண வாழ்க்கைக்குப் பின்பாக, ரகசியத் திட்டமொன்றை Naima  செயல்படுத்தினார் – அந்த முடிவு எல்லாவற்றையும் மாற்றியது. இரகசியமாகப்

பணத்தைச் சேமித்து, மூன்று விமானச் சீட்டுகளை வாங்கியவர், முடிவில் தன் மகன் மற்றும் மகளுடன் பாகிஸ்தானை விட்டு வெளியேறினார். ஒரு பெண் தனியாக அப்படிச் செய்வது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு விடயமாகும்.

கனடா பாதுகாப்பை வழங்கியது, ஆனால் வசதியை அளிக்கவில்லை. ஆரம்ப நாள்கள் கடினமாக இருந்தன: ஒரு புதிய கலாசாரம், மட்டுப்படுத்தப்பட்ட வேலைத் திறன்கள், இங்கிலாந்தில் இருந்த Naima இன் தாயின் மரணம். ஆனால், படிப்படியாக மீண்டும் வாழ்க்கையை அவர் கட்டியெழுப்பினார்.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு தனது TSHC கட்டடத்திற்கு அவர் இடம்பெயர்ந்தபோது, புதியதொரு சவாலை Naima எதிர்கொண்டார்: ஏனைய வாடகைதாரர்களிடமிருந்து பாரபட்சம். ஆனால், பின்வாங்குவதற்குப் பதிலாக, Naima மேலும் நெருங்கினார். அவர் bingo இரவுகளில் கலந்துகொண்டார், அயலவருக்கு உதவினார், மெதுவாக நம்பிக்கையைப் பெற்றார். மூன்று மாதங்களுக்குள், அவுருடைய அயலவர் அவரைக் கட்டடப் பிரதிநிதியாகப் பரிந்துரைத்திருந்தனர்!

தனது பன்முகக் கலாசார விருந்துகள் மற்றும் பன்முகத்தன்மை கொண்டாட்ட நிகழ்வுகள் குறித்து Naima மிகவும் பெருமைப்படுகிறார். "தெரியாததைப்

பற்றிய பயமே பாரபட்சம்," என்கிறார் அவர். மக்கள் ஒருவருக்கொருவர் தங்களின் பின்புலங்களைப் பற்றிப் பேசி, ஒருவரை ஒருவர் சற்று அறிந்துகொண்டபோது, நிலைமைகள் பெரிதும் மாறின. விரைவில், அருகிலுள்ள மற்றக் கட்டடங்களில் உள்ள வாடகைதாரர்களும், அவருடைய நிகழ்ச்சிகளான casino trips, social nights, மற்றும் இசை, உணவு, சிரிப்பு நிறைந்த ஒன்றுகூடல்களில் கலந்துகொள்ளத் தொடங்கினர்.

Naimaஐப் பொறுத்தவரை, தன் சமூகத்திற்குத் திருப்பிக் கொடுப்பதே அவரது நோக்கமும் மகிழ்ச்சியும் ஆகும். "உங்களால் ஒரு சிலருக்கு உதவ முடிந்தால் மற்றும் ஒரு சிறிய மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தால், உங்கள் வாழ்நாளில் அதுவே போதும்," என்கிறார் அவர். "ஒரு நல்ல மனிதராக இருப்பதே முக்கியமானது."

# உங்கள் சமூகம் பற்றிய ஒரு பார்வை




at a glance!

# உள்ளார்ந்த அர்த்தத்தை விளங்கிக்கொள்ளல்

Viktor Tsimakouridze உடன் நீங்கள் அமர்ந்து பேசும்போது, ஒரு விடயம் உடனடியாகத் தெளிவாகிறது: அவர் தன் வாழ்நாள் முழுவதையும் மக்கள் சொல்வதைக் கூர்ந்து கேட்பதிலேயே செலவழித்திருக்கிறார்.

தற்போது சுதந்திரமான Ukraine ஆக இருக்கும் சோவியத் யூனியனில், பிறந்த விக்டர், ஒரு குடிசார் பொறியாளராகப் பயிற்சி பெற்றார். அதிகரித்து வந்த அரசியல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மையால், 1991இல் சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்ததால் அவரும் அவரது மனைவி Svetlana வும் தங்களுக்கும் தங்கள் இளம் மகளுக்கும் ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தை விரும்பினர். அவர் ரொறன்ரோவுக்குக் குடிபெயர்ந்து, கனேடிய சமூகத்தின் ஓர் அங்கமாக ஆவதற்காகக் கடுமையாக உழைத்தார்.

இங்கே, Viktor புதியதொரு தொழிலைக் கண்டறிந்தார்: மொழிபெயர்த்தல் Ukrainian, Russian மற்றும் ஆங்கிலம் பேசும் திறன் கொண்ட Viktor, காவல்துறை, கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் சபை, மற்றும் கனேடியப் பாதுகாப்பு புலனாய்வுச் சேவை (CSIS) போன்ற அமைப்புகளுக்கு 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு சுயாதீன மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். அவரது பணி அவரை குடிவரவு விசாரணைகள்,



சிறைகள் மற்றும் அகதிகள் தடுப்புக்காவல் நிலையங்களுக்கு அழைத்துச் சென்றது. — பெரும்பாலானோர் காணமுடியாத கனடாவின் ஒரு பக்கத்தைக் காட்டியது.

ஒருவர் சொல்வதை மற்றொரு மொழியில் வெறுமனே திரும்பச் சொல்வதைவிட மொழிபெயர்ப்பு மிகவும் சிக்கலானது என்று Viktor விளங்கப்படுத்துகிறார். "வார்த்தைத் தேர்வில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்," என்கிறார் அவர். சொல்லப்படுவதன் சாராம்சத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும், அத்துடன் கதையின் மனநிலையையும் சரளத்தையும் நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். பலமுறை அவர் எந்தவிதப் பின்புலத் தகவல்களும் இன்றி, ஆழ்ந்து கேட்கும் மற்றும் உண்மையாக மொழிபெயர்க்கும் தனது திறனையும் மட்டுமே நம்பி குடிவரவு விசாரணை ஒன்றுக்குச் சென்றார் . இந்தப் பணியின் மூலம், தற்போதைய போரிலிருந்து தப்பியோடும் பல உக்ரேனியர்கள் உள்ளடங்கலாகப் பாதுகாப்பை நாடும்

மக்களின் நம்பிக்கைகளையும் அச்சங்களையும் அவர் கண்டறிந்துள்ளார்.

அதே அக்கறையையும் கவனத்தையும் Toronto Seniors Housing உள்ள தனது கட்டட சமூகத்திற்கும் Viktor கொண்டு வருகிறார். நத்தார் விருந்துகள் மற்றும் கோடைகால barbecues போன்ற வருடாந்த நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவதற்கு அவர் உதவுகிறார், மேலும் பொழுதுபோக்கு அறைக்கு ஒரு புதிய பியானோவைச் சமூகத்தினர் பெறுவதற்கும் உதவியுள்ளார். "நான் குடிமைச் சமூகத்தின் ஓர் உறுப்பினராக என்னை நிலைநிறுத்திக் கொள்ள விரும்புகிறேன்," என்கிறார் அவர். இங்கு வசிக்கும் மக்களுக்கு, அவர்கள் எங்கிருந்து வந்தவர்களாக இருந்தாலும், நான் உதவ விரும்புகிறேன்.

மொழிபெயர்ப்பு அல்லது தன்னார்வப் பணிகளில் ஈடுபடாத நேரங்களில், நல்ல கோப்பி அருந்துவதையும், ஐரோப்பிய விளையாட்டுகளைப் பார்ப்பதையும், உலக அரசியலைப் பின்தொடர்வதையும் அவர்Èவிரும்புகிறார். மக்களுக்கு எது உந்ததலைத் தருகிறது, அவர்கள் எப்படி முடிவுகளை எடுக்கிறார்கள் என்பது போன்ற மனித உளவியலில் அவருக்கு எப்போதுமே ஒருவித ஈர்ப்பு உண்டு. மக்களின் வார்த்தைகளுக்கும், அவற்றின் பின்னணியில் உள்ளவற்றுக்கும் கவனம் செலுத்துவது,

எங்களைச் சுற்றியுள்ள உலகத்தை வடிவமைக்க முடியும் என்பதை Viktorஇன் கதை காட்டுகிறது.

## கோப்பிக்கான சந்திப்பைத் தொடங்குவது எப்படி

Coffee socials, coffee clubs என்றும் அழைக்கப்படுகின்றன. இவை, வாடகைதாரர்களால் ஏற்பாடு செய்யப்படும் மிகவும் பிரபலமான மற்றும் விரும்பப்படும் சமூக நடவடிக்கைகளில் சிலவாகும். இந்த ஒன்றுகூடல்கள், ஒரு கோப்பை கோப்பியை அருந்தியபடி, உரையாடுவதன் மூலம் எளிதாகவும் அர்த்தமுள்ள வகையிலும்  அயலவர்கள் இணைவதற்கு ஒரு வழியை வழங்குகின்றன.

சில கட்டடங்களில் வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் கோப்பிச் சந்திப்புகள் நடத்தப்படுகின்றன. சிலர் இந்தப் பாரம்பரியத்தைப் பல ஆண்டுகளாகப் பின்பற்றி வருகின்றனர்! உதாரணத்துக்கு, **71 Merton Street, 717 Broadview Avenue** மற்றும் **585 King Street East** ஆகிய இடங்களில், அர்ப்பணிப்புள்ள Tenant Circles ஆல் வழிநடத்தப்படும், கிரமமான, பலர் கலந்துகொள்ளும் கோப்பிச் சந்திப்புகள் நடைபெறுகின்றன.

**உங்கள் கட்டடத்தில் இன்னும் கோப்பிச் சந்திப்பு நிகழ்ச்சி நிகழ்வதில்லை, அப்படி ஒன்றை**

## ஆரம்பிப்பதற்கு உங்களுக்கு ஆர்வம் இருக்கிறதெனில், தெரிந்துகொள்ள வேண்டிய மூன்று விஷயங்கள் இதோ.

- **உங்கள் சமூக சேவைகள் ஒருங்கிணைப்பாளருடன் (CSC) பேசுங்கள்.** உங்கள் CSC தான் தொடங்குவதற்கு சிறந்த இடம். சிந்தனைத் திரட்டல் (brainstorming) மற்றும் திட்டமிடலைத் தொடங்குவதற்கு அவர்கள் உங்களுக்கு உதவ முடியும்.
- **சமூகச் செயல்பாடுகள் நிதியம் (CAF) மூலம் நிதி கிடைக்கிறது.** உங்களுக்குத் தெரிந்திருக்கலாம், CAF மூலம் வாடகைதாரர்களால் நடத்தப்படும் சமூக நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு கட்டடத்திற்கும் குறிப்பிட்ட அளவு நிதியை TSHC வழங்குகிறது. மேலும் அறிந்துகொள்வதற்கு உங்கள் CSC உடன் பேசுங்கள்.
- **இந்தச் செய்தியைப் பரப்புங்கள்**. உங்கள் கட்டிடத்தில் உள்ள மற்றவர்களுக்கு நிகழ்ச்சிகளைப் பற்றி விளம்பரப்படுத்துவதற்குச், சுவரொட்டிகளையும் வாய்மொழிப் பிரச்சாரத்தையும் பயன்படுத்துவதை நீங்கள் பரிசீலிக்கலாம்.

## TSHC கட்டிடங்களுக்கு fitness (உடற்பயிற்சி)ஐ, Parks and Recreation கொண்டுவருகிறது.

சமூகத்தில் உள்ள பல கூட்டாளர் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு TSHCக்குக் கிடைத்துள்ளது. அத்தகைய கூட்டாளர்களில் ஒன்றாக **City of Toronto's Parks and Recreation** இருக்கிறது.

கடந்த இலையுதிர்காலத்தில், உடற்பயிற்சித் திட்டங்களை நேரடியாக எங்கள் கட்டடங்களுக்கே கொண்டுவரும் ஒரு முன்னோடித் திட்டத்தை Parks and Recreation உடன் இணைந்து Toronto Seniors Housing தொடங்கியது. வாடகைதாரர்கள் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும், இணைந்தும் இருப்பதை இது எளிதாக்குகிறது. சில கட்டடங்களில்; குறிப்பாக முதியோர்களை மனதில்கொண்டு வடிவமைக்கப்பட்டிருந்த "**gentle fit**" வகுப்புகளையும், **விழுந்து போவதைத் தடுக்கும் பயிலரங்குகளையும்** கொண்ட ஒன்பது வார கால அமர்வுகள் நடைபெற்றிருந்தன.

வாடகைதாரர்கள் உற்சாகமான வரவேற்பை அளித்திருந்தனர். முன்னோட்டத் திட்டம் முழுவதற்கும் **221 பங்கேற்பாளர் பங்கேற்றிருந்தனர்.** மிக முக்கியமாக, கருத்துத் தெரிவித்த வாடகைதாரர்களில் 91 சதவீதமானோர் இந்தத் திட்டத்தை "சிறந்தது" அல்லது "நல்லது" என மதிப்பிட்டுள்ளனர்.

அந்த வகுப்புகள் தங்களை மேலும் வலிமையையும், உறுதியையும், அயலவர்களுடன் மிக நெருக்கத்தையும் உணர வைத்ததாக வாடகைதாரர்கள் கூறினர். சொந்தக் கட்டிடத்திலேயே எளிதில் அணுகக்கூடிய, இலவச உடற்பயிற்சி வாய்ப்புகள் இருப்பதைப் பலர் பாராட்டினார்கள்.

Parks and Recreationஇன் கூட்டாண்மைக்கும், பங்கேற்ற அனைத்து வாடகைதாரர்களுக்கும் TSHC நன்றியாக இருக்கிறது. இந்த முன்னோட்டத் திட்டத்தின் முடிவுகளைப் பயன்படுத்தி, TSHCஇன் வாடகைதாரர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை ஆதரிப்பதற்காக, Parks and Recreation உடன் தொடர்ந்து பணியாற்றுவதற்கான வழிகளை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்.

## செல்லப்பிராணிகளுடன் சந்தோஷமாக வாழல்

Toronto Seniors Housing இல் வசிக்கும் அனேகமான வாடகைதாரர்களின் வாழ்வில் செல்லப்பிராணிகள் ஒரு அற்புதமான அங்கமாகத் திகழ்கின்றன. எங்களின் சமூகத்தை அனைவருக்கும் உகந்ததாக வைத்திருப்பதற்காக, செல்லப்பிராணி உரிமையாளர்கள் சில எளிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது உதவியாக இருக்கும்:

- உங்கள் இருப்பிடத்திற்கு வெளியே செல்லும்போது செல்லப்பிராணிகளைக் **leash/கயிற்றில்** கட்டியபடி வைத்திருங்கள்.
- **கழிவுப் பைகளை** எடுத்துச் செல்லுங்கள் மற்றும் உங்கள் செல்லப்பிராணியின் கழிவுகளை அப்புறப்படுத்துங்கள்.
- செல்லப்பிராணியின் கழிவுகளைக் குப்பையில் போடுவதற்கு முன், அவற்றை **இரட்டைப் பைகளில்**ÈÚ**(Double-bag)** இடுங்கள்.
- செல்லப்பிராணிகளைப் பல்கனியில் தனியாக ஒருபோதும் விடாதீர்கள்



அக்கறையுள்ள செல்லப்பிராணி உரிமையாளராக இருப்பதில், உங்கள் செல்லப்பிராணி மற்றவற்றுடன் எவ்வாறு பழகுகிறது என்பதில் கவனம் செலுத்துவதும் அடங்கும். சில அயலவர்கள் **நாய்களைக் கண்டால் பதற்றமடையலாம்**, குறிப்பாக ஒரு நாய் அவர்கள் மீது பாய்ந்தால்—அது நட்பாகப் பாய்ந்திருந்தாலும் கூட.

ஒரு நாய் உரிமையாளர் என்ற முறையில், எல்லா நேரங்களிலும் உங்கள் நாயின் நடத்தைக்கு நீங்களே

பொறுப்பாவீர்கள். உங்கள் நாய்க்குப் பயிற்சி அளிப்பது, அதை அருகிலேயே கயிற்றால் கட்டியபடி வைத்திருப்பது, அது குதிப்பதைத் தடுப்பது ஆகியவை பாதுகாப்பாகவும் மதிக்கப்படுவதாகவும் அனைவரும் உணர உதவுகின்றன.

சிறிதளவு கவனிப்பும் மரியாதையும் இருந்தால், செல்லப்பிராணிகளும் அயலவரும் நமது சமூகத்தை மகிழ்ச்சியாகப் பகிர்ந்துகொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு, **Toronto.ca** க்குச் சென்று, “விலங்குகள் மற்றும் செல்லப்பிராணிகள்” எனத் தேடுங்கள்.

நாய் பற்றி அல்லது அதன் உரிமையாளர் பற்றிப் புகார் அளிப்பதற்கு, **311** என்ற இலக்கத்தை அழையுங்கள்.

## முக்கியத்துவம் வாய்ந்த நாள்களைக் கொண்டாடல்

Toronto Seniors Housing இல், எங்கள் சமூகத்தின் பன்முகத்தன்மையை நாங்கள் மதிக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும், பல்வேறு வாடகைதாரர் குழுக்களின் வரலாறு மற்றும் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் சிறப்புத் திகதிகளை நாங்கள் அடையாளப்படுத்துகிறோம். ஜூன் மாதத்தில், பின்வருவனவற்றை நாங்கள் கொண்டாடுகிறோம்:

**முதியோர் மாதம்**

எங்களின் குடும்பங்கள், சுற்றுப்புறங்கள் மற்றும் நகரில் முதியோர் ஆற்றிவரும் முக்கியப் பங்கை Ontario's Seniors Month கொண்டாடுகிறது. சமூக வாழ்க்கைக்கு முதியோர் கொண்டுவரும் ஞானத்தையும் அனுபவத்தையும் அங்கீகரிக்க வேண்டிய தருணம் இது. Seniors Monthஇன் போது, முதியோர் சிறப்பாக வாழ்வதற்கும் மற்றவர்களுடன் தொடர்பில் இருப்பதற்கும் உதவும் திட்டங்கள் மற்றும் ஆதரவுகளின் முக்கியத்துவத்திலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்.

**Pride Month**

2SLGBTQI+ சமூகத்தையும், சமத்துவம், பாதுகாப்பு மற்றும் உள்ளடக்கலுக்கான தொடர் இயக்கத்தையும் Pride Month கௌரவிக்கிறது. அன்பு, அடையாளம் மற்றும் ஒவ்வொருவரும் உண்மையாக வாழ்வதற்கான உரிமையை Pride Month கொண்டாடுகிறது. TSHCஇல், இன்று நாங்கள் அனுபவிக்கும் சுதந்திரத்துக்குப் பல 2SLGBTQI+ முதியோர் வழி வகுத்துள்ளனர் என்பதையும் Pride எங்களுக்கு நினைவூட்டுகிறது.

**National Indigenous History Month (தேசியப் பழங்குடியினர் வரலாற்று மாதம்)**

First Nations, Inuit, Métis Peoples ஆகியோரின் வரலாறுகள், கலாசாரங்கள் மற்றும் பங்களிப்புகளைப் பற்றி

அறிந்து கொள்ளவும், அவற்றைக் கௌரவிக்கவும் கனேடியர்கள் அனைவரையும் இந்த மாதம் அழைக்கிறது. உண்மை, நல்லிணக்கம் மற்றும் மரியாதைக்குரிய உறவுகளின் முக்கியத்துவம் குறித்து சிந்திப்பதற்கான தருணமும் இதுவே.

இந்த நிகழ்வுகள் யாவும், நாங்கள் கற்பதற்கும், கொண்டாடுவதற்கும், நாங்கள் அனைவரும் மதிக்கப்படுவதாக உணரும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களைத் தொடர்ந்து கட்டியெழுப்புவதற்கும் எங்களை ஊக்குவிக்கின்றன.

## அழைப்பிலிருந்து வழக்கு வரை: CSU விசாரணைகள் எவ்வாறு செயல்படுகின்றன

Toronto Seniors Housing Corporation (TSHC), Toronto Community Housing Corporation (TCHC) ஆகியவற்றின் சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் **Community Safety Unit (சமூகப் பாதுகாப்புப் பிரிவு /CSU)** முக்கியமானதொரு பங்காற்றுகிறது. அழைப்புகளுக்குப் பதிலளிப்பது, வாடகைதாரர்களின் நலனை விசாரிப்பது, தேவைப்படும்போது காவல்துறையுடன் நெருக்கமாகப் பணியாற்றுவது ஆகியவை அவர்களின் பணியாகும்.

CSUஐ நீங்கள் அழைக்கும்போது, ஒரு கரிசனையை மட்டும் நீங்கள் தெரிவிக்கவில்லை – சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கு அனேகமாக வழிவகுக்கும்

புலன்விசாரணை ஒன்றைத் தொடங்குவதற்கு உதவுவதுடன் காவல்துறைப் பணிகளுக்கும் ஆதரவளிக்கிறீர்கள்.

**புள்ளிவிவரங்களின்படி CSU**

TSHC, TCHC ஆகிய இரண்டும் இணைந்து வட அமெரிக்காவின் மிகப்பெரிய social housing communities ஒன்றை உருவாக்குகிறது. இதன் காரணமாக, CSUக்கு மிக அதிக எண்ணிக்கையிலான அழைப்புகள் வருகின்றன.

- 2025ஆம் ஆண்டில், 140,015 தொலைபேசி அழைப்புகளை CSU கையாண்டது.
- அந்த அழைப்புகளில் சுமார் 60% அழைப்புகளுக்கு விசேட காவலர் ஒருவரின் (Special Constable) பதிலளிப்புத் தேவைப்பட்டிருக்கிறது.
- CSU வாரத்தில் ஏழு நாட்களும், 24 மணி நேரமும் இயங்குகிறது.

## CSUஐ நீங்கள் அழைக்கும்போது என்ன நடக்கும்?



நீங்கள் ஒரு சம்பவத்தைப் பற்றிப் புகாரளிக்கும்போது, உங்கள் கட்டடத்திற்கு விசேட காவலர் ஒருவர் அனுப்பப்படலாம். சம்பவ இடத்திற்குச் சென்ற பிறகு, அதிகாரி ஒரு அறிக்கை எழுதி, விசாரணையைத் தொடங்குகிறார். இதில் நடமாட்டம் பற்றிய காணொளிப் பதிவுகளைப் (video footage)Èபரிசீலித்தல், நகர் முழுவதும் உள்ள CSU அதிகாரிகளுடன் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுதல், **Toronto Police Services (TPS)** உடன் இணைந்து பணியாற்றுதல் ஆகியவை அடங்கலாம். இந்தக் குழுப்பணி, சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கும், குற்றங்களை விரைவாகத் தீர்ப்பதற்கும் உதவுகிறது.

## CSU விசாரணைகள் எவ்வாறு முடிவுகளுக்கு வழிவகுக்கின்றன

### உதாரணம் 1: உடைத்து உள்நுழைதல்

சில மாதங்களுக்கு முன்பு, இரண்டு நபர்கள் நகரின் மையப்பகுதியில் உள்ள TSHC கட்டடத்திற்குள் புகுந்து

பொரு ள்களைத் திருடினர். CSU புலனாய்வாளர்கள் நடமாட்டம் பற்றிய காணொளிப் பதிவுகளை ஆய்வு செய்து, சந்தேக நபர்களின் படங்களுடன் நகர் முழுவதும் “BOLO” (கண்காணிக்கவும்) அறிவிப்பை வெளியிட்டனர்.

சில நாள்களுக்குப் பின்னர், அந்தக் கட்டிடத்தின் பின்புறத்தில் அந்த நபர்களில் ஒருவரை CSU அதிகாரிகள் கண்டுபிடித்தனர்— காணொளியில் காணப்பட்டபோது அணிந்திருந்த அதே ஆடைகளையே அவர் அணிந்திருந்தார். இன்னொரு அதிகாரி, இரண்டாவது சந்தேக நபரை முன்பான ஊட்டாட்டம் ஒன்றிலிருந்து அடையாளம் கண்டுகொண்டார். இருவரும் கைது செய்யப்பட்டு TPS இடம் ஒப்படைக்கப்பட்டனர்.

**உதாரணம் 2: தீவைப்பு**

இன்னொரு சம்பவத்தில், North York TSHC கட்டடத்தின் நுழைவாயிலுக்கு அருகில் ஒட்டப்பட்டிருந்த அறிவிப்புப் பலகைக்கு யாரோ தீ வைத்துவிட்டதாக ஒரு மேலதிகாரி தெரிவித்தார். அந்தக் காணொளியை CSU ஆய்வு செய்தபோது, ஒருவர் காகிதத்திற்குத் தீ வைப்பது கண்டறியப்பட்டது. பணியாளர்கள் அதை உற்றுப் பார்த்தபோது, TSHC கட்டிடங்களில் /TCHC அல்லாத பிற கட்டிடங்களில் நடந்த இதேபோன்ற தீவைப்புச் சம்பவங்கள் குறித்த TPS செய்திக்குறிப்பின் மூலம் அவரை அடையாளம் கண்டுகொண்டனர்.

அவர்களுடைய அறிக்கை சந்தேக நபரின் அடையாளத்தை உறுதிப்படுத்த உதவியது.

--

CSUஐ நீங்கள் தொடர்புகொள்ளும்போது, வலுவான வழக்குகளுக்கும், அனைவருக்கும் பாதுகாப்பான சமூகத்திற்கும் வழிவகுக்கக்கூடிய ஒரு புலன்விசாரணையைத் தொடங்குவதற்கு உதவுகிறீர்கள். பகிர்வதற்கு உங்களிடம் தகவல்கள் இருந்தால் அல்லது ஒரு சம்பவம் பற்றி நீங்கள் அறிவிக்கவேண்டி இருந்தால், **24/7 CSU Dispatch (கட்டுப்பாட்டு மையம்) ஐ, 416-921-2323 என்ற இலக்கத்தில் அழையுங்கள்.**

## கூட்டுநிறுவனம் தொடர்பான இற்றைப்படுத்தல்கள்

### TSHCஇன் எதிர்காலத்தை வடிவமைக்க உதவுங்கள்

Toronto Seniors Housing 2026-ஆம் ஆண்டில் தனது **மூலோபாய வழிகாட்டுதல்களை** இற்றைப்படுத்துருகிறது. இந்த மூலோபாயத்தை வழிநடத்த உதவும் வகையில், வாடகைதாரர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டாளர் அமைப்புகளிடமிருந்து கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக நாங்கள் கருத்துக்களைக் கேட்டு வருகிறோம். மே

மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில், நாங்கள் பின்வருவனவற்றைப் பற்றித் தொடர்ந்து அறிந்துகொள்வோம்:

- கவனம் தேவைப்படும் பிரச்சினைகள்,
- அவற்றைத் தீர்ப்பதற்கு எவ்வாறு நாங்கள் இணைந்து செயல்படலாம், மற்றும்
- எங்களின் பணிக்கு வழிகாட்ட வேண்டிய விழுமியங்கள்.

Regional Tenant Volunteer Meeting (பிராந்திய தன்னார்வ வாடகைதாரர் சந்திப்புகள்) போன்ற நிகழ்வுகள் ஊடாக வாடகைதாரர்கள் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்தப் பணிக்கு ஆதரவளிக்கும் அனைத்து வாடகைதாரகளுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆண்டின் பிற்பகுதியில் முடிவெடுக்கப்பட்ட மூலோபாயம் குறித்த மேலதிக தகவல்களைப் பகிர்வோம்.

## உங்கள் மனித உரிமைகள் முக்கியமானவை

ஒன்ராறியோ மனித உரிமைகள் சட்டத்தின்படி, ஒன்ராறியோவில் உள்ள அனைவருக்கும் குடியிருப்பு வசதியில் சம உரிமைகளும் வாய்ப்புகளும் உண்டு. இதற்கு ஆதரவளிக்கும் வகையில், **வாடகைதாரர் மனித உரிமைக் கொள்கையை** (**Tenant Human Rights Policy**) TSHC உருவாக்கியிருப்பதுடன், மனித

உரிமைகளையும் அவை தங்களது பணியில் எவ்வாறு பொருந்தும் என்பதையும் பணியாளர்கள் விளங்கிக்கொள்வதற்காக அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கிறது. எங்கள் கொள்கை பற்றி எங்கள் இணையத்தளத்தில் ( **bit.ly/4tIsgJe** ) நீங்கள் மேலும் அறிந்துகொள்ளலாம்.

ஒரு பணியாளர், விற்பனையாளர், வாடகைதாரர் அல்லது கொள்கையால் உங்கள் மனித உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக நீங்கள் நம்பினால், பின்வரும் வழிகளில் நீங்கள் முறைப்படி புகார் அளிக்கலாம்:

- இணையத்தில் ஒரு படிவத்தைப் பூர்த்திசெய்தல் ( **bit.ly/4mZbcvY)**
- உங்கள் Seniors Services Coordinator ஒருங்கிணைப்பாளரிடம் (SSC) படிவத்தின் பிரதி ஒன்றைக் கோரல்
- **416-945-0888** என்ற இலக்கத்தில் அல்லது Solutions@TorontoSeniorsHousing.ca இல் Solutions Team (தீர்வுகள் குழு) ஐத் தொடர்புகொள்ளல்.

Toronto Seniors
Housing Corporation

